சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சிலருக்கு S.T. பட்டியலில் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையானவர்களுக்கு கடந்த 7, 8 ஆண்டு காலமாக வழங்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆய்வு செய்து காட்டுநாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்த அனைவருக்கும் ஆதிவாசிகளுக்குரிய சான்றிதழ் பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்கும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பு ஏற்ற பின்பு இது போன்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பயன்பாட்டிற்குச் செல்ல வேண்டிய, அவர்களுக்குரிய சலுகைகள் எல்லாம் நேரடியாகச் செல்லவேண்டு மென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனமாக அதை மேற்கொண்டு வருகிறார்கள். அதன் அடிப்படையில்தான் எங்கெங்கு ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி, அல்லது பழங்குடியினர் பட்டியல் இன மக்களாக இருந்தாலும் அவர்கள் பயன்பெறவேண்டுமென்றுதான், அவர்களுக்குரிய சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்றுதான் மிகவும் கவனத்தோடு அவர்களுக்குரிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

31—

பேருந்து இயக்குதல்

***19550—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து ஈசல்பட்டி வரை 30 கி.மீ. செல்லும் நகரப் பேருந்து எண் 29—ஐ பரிகம் கிராமம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS

2004 ஜூலை 27]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரியிலிருந்து பரிகம் கிராமம் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், தருமபுரியிலிருந்து ஈசல்பட்டி வரை 30 கி.மீ. செல்லும் நகரப் பேருந்து தடம் எண் 29—ஐ நீட்டித்து இயக்கினால் நீளம் 34 கி.மீ. வருவதாலும், கோரிக்கைப்படி அப்பேருந்தினை ஈசல்பட்டியிலிருந்து பரிகம் வரை நீட்டித்து இயக்கிட இயலாத நிலையுள்ளதால், இத்திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

32—

கரும்புக் கழிவு

***30068—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இரண்டரை கோடி டன் அளவிற்கு கரும்புக் கழிவு (மொலாசஸ்) தேங்கிக் கிடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.